விலை ரூபா 6.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி - 18 01-04-2003 செவ்வாய்க்கிழமை ஓசை 42

வவுனியா ஒப்டிக்கல்
Vavuniya Optical
கண் பரிசோதிக்கப்பட்டு மூக்குக் கண்ணாடி 1/2 மணித்தியாலத்தில் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வைத்திய துண்டுகளுக்கும் உடன் கண்ணாடி வழங்கப்படும்.
வவுனியா ஒப்டிக்கல்,
30 பஸ் நிலையம்,
வவுனியா. (சி-7815)

யாழ். நகரின் இருதயம் போன்ற பகுதியில்

# புதிய இராணுவப் படைத்தளம் அமைக்கும்

# அரசின் முடிவிற்குப் புலிகள் பலத்த கண்டனம்!

## அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பாதுகாப்பு அமைச்சர் மாரப்பனவிற்குக் கடிதம்

**யாழ். மாநகர சபைக்குச் சொந்தமானதும், யாழ். நகரின் இருதய நிலப்பகுதி போன்றதுமான யாழ். மாநகர சபை அலுவலகம் முன்னாலுள்ள பரந்த விசாலமான பகுதியை உள்ளடக்கியதான பாரிய படைத்தளத் தொகுதி ஒன்றை அமைப்பதென்ற அரசாங்கத்தின் தீர்மானத்தை விடுதலைப்புலிகள் இயக்கம் கடுமையாகக் கண்டனம் செய்துள்ளது.**

இது குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சிறிலங்காவின் படைத்துறை அமைச்சர் திலக்மாரப்பனவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே தமது கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

இக் கடிதத்தின் பிரதிகள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருக்கும், சிறிலங்கா சமாதான செயலகப் பணிப்பாளருக்கும், நோர்வேத் தூதுவருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

(08ஆம் பக்கம் பார்க்க)

# ஆனந்தசங்கரிக்கு எதிராக கிழ.பல்கலையில் போராட்டம்!

(மட்டக்களப்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவருக்கு எதிராக கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் சமூகம் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி, தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்த கருத்தை ஆட்சேபித்தே இந்தப் போராட்டத்தை நடத்தியுள்ளது.

ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்ட இவர்கள் ஆனந்தசங்கரியின் கொடும்பாவியையும் எரித்துள்ளனர்.

பல்கலைக்கழக முன்றலில் நேற்றுப் பகல் 12.30 மணிக்கு ஆரம்பித்து இப்போராட்டம் நடத்

(08ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்கா கடற்படைத் தொடரணி மீது மீன்பிடிப் படகில் வந்து தாக்கினராம்!

## படகொன்று மூழ்கடிக்கப்பட்டது

(கொழும்பு)

திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைக்குச் சென்று கொண்டிருந்த கடற்படைத் தொடரணி மீது, மீன்பிடிப் படகுகளில் வந்தவர்கள் தாக்க முற்பட்டபோது படையினர் திருப்பித் தாக்கி படகு ஒன்றினை மூழ்கடித்துள்ளதாக சிறிலங்காப் படைத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக படைத்துறை அமைச்சு வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில்:

நேற்று மாலை 5.20 மணிக்கு 1700 சிறிலங்காப் படையினரை ஏற்றிக் கொண்டு 'லங்கா முடித்த' கப்பல் புறப்பட்டதாகவும் மாலை 6.35 மணிக்கு மீன்பிடிப் படகுகள் இரண்டில் வந்தவர்கள் தாக்க முற்பட்டபோது கப்பலுக்கு பாதுகாப்

(08ஆம் பக்கம் பார்க்க)

# கண்ணிவெடி விழிப்புணர்வு வாரம் இன்று முதல் 7ஆம் திகதி வரை

(அலுவலக செய்தியாளர்)

வெண்புறா நிறுவனத்தினரால் கண்ணிவெடி விழிப்புணர்வு வாரம் இன்று முதல் தமிழீழமெங்கும் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் ஏழாம் திகதி வரை மேற்படி கண்ணிவெடி வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# வயோதிபரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுப்புதைப்பு

(அலுவலக செய்தியாளர்)

முறிகண்டிப் பகுதியில் வயோதிபரின் சடலமொன்று கண்டெடுக்கப்பட்டு புதைக்கப்பட்டுள்ளது.

முறிகண்டி தென் இந்திய திருச்சபைக்கு அருகில் உள்ள பற்றை ஒன்றில் இருந்து கண்டெடுக்கப்பட்ட இவ்வயோதிபரின் சடலம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட கிளிநொச்சிக் காவல்துறையினர், முறிகண்டி ஆலயப் பகுதிகளில் அநாதரவாகத் திரிந்த வயோதிபர் என்றும், இவர் பூவரசங்குளம் வவுனியாவைச் சேர்ந்தவர் என்றும் விசாரணை மூலம் தெரியவந்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

(பா.09)

# அன்ரன் பாலசிங்கம் – பீரிஸ் ஏப். 21இல் லண்டனில் பேச்சு!

## கண்காணிப்புக்குழுவின் அதிகாரம் முக்கிய இடம்பெறும்

(லண்டன்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவ ஆசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்களை சிறிலங்காவின் அரசியல் யாப்பு விவகார அமைச்சரும் பேராசிரியருமான ஜீ.எல். பீரிஸ் சந்தித்துப் பேச உள்ளார்.

எதிர்வரும் 21ஆம் திகதி லண்டனில் இந்தச் சந்திப்பு நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஜப்பானில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினரின் அதிகாரம் அதிகரிக்கப்பட வேண்டும் என்று விடுதலைப்புலிகள் தரப்பில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

கடல் மற்றும் தரையில் இடம்பெறும் போர்நிறுத்த மீறல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே விடுதலைப் புலிகள் இந்தக் கோரிக்கையை முன்வைத்ததுடன் இதற்கு இணக்கம் காணப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் பலதரப்பட்ட சந்திப்புக்களை மேற்கொண்டு இந்த விடயம் தொடர்பாக ஆராய்

(08ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்கத் துருப்புக்களுக்கு பாலைவனம் புதைகுழியாகும்

## ஈராக் வெளிவிவகார அமைச்சர் எச்சரிக்கை

ஈராக்கிற்குள் நுழைந்த அமெரிக்க வீரர்கள் மீண்டும் உயிருடன் திரும்பப் போவதில்லை என்று ஈராக் வெளியுறவு அமைச்சர் நஜீவ் சப்ரி தெரிவித்துள்ளார்.

ஈராக் பாலைவனங்கள் அமெரிக்க பிரிட்டன் வீரர்களின் புதைகுழிகளாக மாறும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈராக்கிற்கு ஆதரவாக அரபு நாடுகளைச் சேர்ந்த சுமார் ஐயாயிரம் போராளிகள் போராட்டத்தில் இணைந்து கொண்டிருப்பதாக அவர் கூறினார்.

# சதாமின் அரண்மனை மீது விமானங்கள் குண்டு வீச்சு!

## தொலைத்தொடர்புக் கட்டடங்களும் அழிவு

ஈராக் மீது அமெரிக்க விமானப்படையினர் நேற்று நடத்திய தாக்குதலில் சதாம் ஹுசைனின் அரண்மனையும் தொலைத்தொடர்புக் கட்டடங்களும் தகர்க்கப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈராக் இராணுவத்தின் தற்கொலைத் தாக்குதலால் சீற்றம் கொண்டுள்ள அமெரிக்கப் படைகள் அதிநவீன விமானங்கள் மூலம் பாக்தாத், லொச்சோ, பஸ்ரா போன்ற நகரங்கள் மீது சக்திவாய்ந்த குண்டுகளை வீசித் தாக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பாக்தாத்தில் உள்ள சதாம்

(08ஆம் பக்கம் பார்க்க)



## வரி விளம்பரம்

### தேவை

சில்லறைப்பணம் எமக்குத் தேவையாக உள்ளது 1000ரூபா தருபவர்களுக்கு 50 ரூபா வீதம் வழங்கப்படும் தொடர்புகளுக்கு மதி உணவகம் பரந்தன் சாலை புதுக்குடியிருப்பு. (சி-7729)

### தவறிவிட்டது

செல்வரத்தினம் ரஜனி ஆகிய எனது தேசிய அடையாள அட்டை இல.818441568V கிளிநொச்சி பொதுச்சந்தையடியில் தவறியுள்ளது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (3057)


# கிளி.1ஆம் கட்ட மருத்துவமனையில் 62 பேருக்கு பற்சிகிச்சை

கிளிநொச்சி மாவட்டத்தில் இலவச நடமாடும் பற்சிகிச்சை நேற்று கிளிநொச்சி 1ஆம் கட்ட வைத்தியசாலையில் நடைபெற்றது.

கிளி.மாவட்ட மாகாண சுகாதாரசேவைகள் பிரதிப்பணிப்பாளர் பணிமனையின் ஒழுங்கமைப்பில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை பற்சிகிச்சை நிபுணர்களான டாக்டர் என். சுஜிதலோஜினி, டாக்டர் எஸ்.சுபாஜினி, ஆகியோர் மேற்படி வைத்தியசாலைக்கு வருகைமேற்கொண்டு பல் மருத்துவசேவையினை மேற்கொண்டனர்.

நேற்று நண்பகல் 12.00 மணிமுதல் பி.ப 5.00 மணிவரை மேற்படி வ்வைத்தியசாலையில் வைத்து 62 க்கும் மேற்பட்ட நோயாளர்களுக்கு பற்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இன்று பூநகரி பிரதேச செயலகத்தில் வைத்து மேற்படி பற்சிகிச்சை இடம் பெறவுள்ளமைகுறிப்பிடத்தக்கது (சோ.லோ)



# பாடசாலை மாணவர்களுக்கு சீருடை விநியோகம்

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சி தெற்கு ப.நோ.கூ. சங்கத்தின் தொழிற்பரப்பிற்குள் இயங்கும் 17 பாடசாலைகளுக்கு கல்வி அமைச்சினால் வழங்கப்படும் பாடசாலை மாணவர்களுக்கான சீருடை வழங்கலை கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கத்தின் ஊடாக 2ம் கட்டமாக வழங்குவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்படி சீருடை விநியோகம் கீழ்க்குறிப்பிடும் திகதிகளில் மு.ப 9.00 - பி.ப 4.00 மணிவரையும் நடைபெறும். மேற்படி விநியோகம் முழுமையாக நடைபெறுவதற்கு அவ்வப் பகுதி பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், கிராமசேவை உத்தியோகத்தர்கள் ஏனைய பொதுநலன் விரும்பும் அமைப்புக்களை ஒத்துழைப்பு நல்குமாறும், பாடசாலைகளில் வைத்து சீருடை வழங்கும் நடவடிக்கை இக்கட்டத்துடன் முடிவடைவதால் சீருடைக்கான முத்திரை வைத்திருப்பவர்கள் அனைவரும் உரிய பாடசாலைகளில் வந்து பெற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளும், விநியோகத் திகதிகளும்:

நாளை புதன்கிழமை, கிளி. மத்திய கல்லூரி, கிளி.மகா வித்தியாலயம், கிளி.பாரதிபுரம் அ.த.க.பாடசாலை, கிளி.கனகபுரம் அ.த.க.பாடசாலை, கிளி.திருவையாறு அ.த.க.பாடசாலை.

03ஆம் திகதி - வியாழக்கிழமை:

கிளி.புனித திரேசா பெண்கள் கல்லூரி, கிளி.கனகாம்பிகைக் குளம் அ.த.க.பாடசாலை, கிளி/சிவ பாதகலையகம் அ.த.க.பாடசாலை, கிளி.திருமுறிகண்டி அ.த.க.பாடசாலை, கிளி.சாந்தபுரம் அ.த.க.பாடசாலை.

04ஆம் திகதி - வெள்ளிக் கிழமை:

கிளி.புனித பற்றிமா றோ.க. பாடசாலை, கிளி.இந்துக் கல்லூரி, கிளி.இந்து ஆரம்ப பாடசாலை, கிளி.செல்வாநகர் அ.த.க.பாடசாலை, கிளி.புதுமுறிப்பு அ.த.க.பாடசாலை, கிளி.சிவநகர் அ.த.க.பாடசாலை, கிளி.உருத்திரபுரம் மகா வித்தியாலயம். (சோ)


## 5ஆம் ஆண்டு நினைவில்...

### கப்டன் ஒப்பிலாமணி

(அன்ரனி நீக்கிலஸ், அன்ரனி நெல்சன்)

மண்ணில் 07.03.1974 விண்ணில் 01.04.1998

நந்தவனாய் வந்துதித்த வீரப் புதல்வனே
அரசியலில் நீ கொடுத்த சொற்பொழிவுகளை
மக்கள் காதினிலே அதிரவைத்தாய்
நீ சென்று விட்டாய் நாம் அழுது குழறுவது
உன் காதினில் கேட்கவில்லையா என்றும்
உன் பாதச் சுவட்டில் தொடர்வேன் என் பணி.

இவருடன் வீரச்சாவடைந்த மேஜர் வசந்தன் 25.04.2000 அன்று லெப். கேணல் சுதந்திரா உட்பட அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகின்றேன்.

தகவல்: என்றும் உன் நினைவில்

(2820) சகோதரி போராளி அற்புதா (அன்பு)


# கணினி பயிலரங்குகளை நடாத்துவது பாராட்டுக்குரிய செயலாகும்

## அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் தங்கன்



(அலுவலக செய்தியாளர்)

கடந்த காலங்களில் கணினியினை எமது மக்கள் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் சிறிலங்கா அரசுதடைசெய்திருந்தது இதன் காரணமாக வன்னியிலிருந்த எமது மக்கள் கணினி அறிவை பெற்றுக் கொள்ளமுடியாத ஓர் பாரிய அவலநிலை ஏற்பட்டிருந்தது.

ஆனால் இந்த சமாதான சூழ்நிலை ஏற்பட்டதன் காரணத்தினால் தமிழீழ மாணவர் அமைப்போடு இணைந்து தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு போன்ற நிறுவனங்கள் கணினி பயிலரங்குகளை எமது மக்களுக்கு நடத்துவது பாராட்டிற்குரியது.

[illegible]வாறு நேற்று முன்தினம் 30ஆ[illegible] தூயவன் அரசறிவியற்கல்[illegible] பெற்றது இணையத்த[illegible]ன்பொருளாக்கம் தொடர்[illegible]னிப் பயிற்சி இறுதிநாள் [illegible]வில் தமிழீழ அரசியல்துறைத் [illegible]ப் பொறுப்பாளர் சோ.த[illegible]ன் அவர்கள் கலந்து சித்தியெய்திய மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கிக் கௌரவித்து உரை நிகழ்த்துகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; வெளிநாட்டில் வாழும் எமது உறவுகள் இன்றைய சூழலில் தாயகத்தில் வாழ்கின்ற எமது மக்களுக்கு கணினி தொடர்பான அறிவினை ஊட்டுவதற்கு தம்மாலான உதவிகளை நல்கிட முன் வந்துள்ளனர்.

இன்று உலகில் கணினியின் செயற்பாடுகள் சகல துறைகளிலும் வளர்ந்து கொண்டு செல்வதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளதுடன் உலகின் போரியலில் நவீன கணினிகளின் பங்களிப்புக்கள் இன்றியமையாததாக அமைந்துள்ளது.

நாமும் எமது போர்காலங்களில் இத்தகைய அறிவியலை ஏற்படுத்தியுள்ளோம். அது எமக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

இனறு கணினியில் உலகம் முன்னேறிச் செல்லும் வேகத்திற்கமைவாக எமது மக்களும் கணினிக்கல்வியில் முன்னேறவேண்டியது முக்கியமானதாகும்.

எமது மக்கள் கணினி அறிவினைப் பெறவேண்டும் என்பதில் எமது தேசியத்தலைவர் மிகுந்த அக்கறைகொண்டுள்ளதுடன் அதற்கா1ன சகல வழிகளையும் மேற்கொண்டுள்ளார் என்றார்.

பயிற்சியில் கலந்து கொண்ட 80 மாணவர்கள், சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் சிறப்புச்சித்தி பெற்ற மாணவர்களுக்கு சிறப்பு பரிசில்கள் வழங்கி கௌரவித்தார். மேற்படி பயிற்சி நெறியினை நெறிப்படுத்திய ஆசிரியர்கள் தமிழீழ மாணவர் அமைப்பினரால் சிறப்புப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பெற்றனர். (சோ.லோ)

## மார்பு நோய்ச் சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

நாளை நடைபெறவிருந்த மார்பு நோய்ச் சிகிச்சையானது நடைபெறமாட்டாது எனவும், சம்பந்தப்பட்ட நோயாளர்களை 04.04.2003 ஆம் திகதியன்று கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ள 'மக்கள் சுகாதாரம்' வைத்திய சேவையில் பங்கு கொண்டு பயன்பெறும் வண்ணம் கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி அவர்கள் தெரிவித்துள்ளார். (சோ)

## பாம்புக் கடிக்கு சிகிச்சை

வடமராட்சிக் கிழக்கு உடுத்துறையில் கடந்த சனியன்று குமரவேலு சறோஜாதேவி (வயது 35) என்னும் குடும்பப்பெண் பாம்புக் கடிக்கு இலக்காகி ஆழியவளையில் உள்ள தியாகதீபம் திலீபன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (11)


## சாவு அறிவித்தல்

### அந்தோனிப்பிள்ளை செலஸ்ரீன்

புதுக்குடியிருப்பு 5ஆம் வட்டாரம் இரணைப்பாலையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை செலஸ்ரீன் என்பவர் காலமானார். அன்னார் காலம் சென்ற அந்தோனிப்பிள்ளை - அஞ்சலீனம்மா ஆகியோரின் மூத்த புதல்வரும் மேரிஜோசெப்பினின் அன்புக் கணவரும், பிறிஸ்ரெசல் (விஜயா)( ஆசிரியை புதுக்குடியிருப்பு ம/வி) ஜெனிற்றாவினி (லண்டன்) றோகினி, கமில்றன், டெனிஸ்ரன் (உடையார்கட்டு ம/வி) பரிமளம், றோசினி, செல்வினி ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார்.

நாளை புதன்கிழமை மாலை 04.30 மணிக்கு இரணைப்பாலை பற்றிமா அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் இரணைப்பாலை சேமக்காலையில் அன்னாரின் இறுதி நல்லடக்கம் இடம்பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

தகவல்:
கி. துரைரெத்தினம்,
இரணைப்பாலை.

(சி-7733)



## கண்ணிவெடி

### விழிப்புணர்வு வாரம்

**01-07,04.2003**

நீங்கள் மீளக் குடியமரத்தான் வேண்டும்

ஆனால் முடமாகிய பின்னர் அல்ல. உங்கள் பாதுகாப்பினை உறுதிசெய்து கொள்ளுங்கள்

யுனிசெப்-வெண்புறா நிறுவனம்

(சி-8043)

# கூட்டுப்படைகளின் தரை நகர்வு சில வாரங்கள் பின்தள்ளப்படலாம்!

## - ஈராக்கின் எதிர்த் தாக்குதல் தீவிரம்

### ஆலோசகர் பதவி விலகினார்!

ஈராக் யுத்தத்தைத் திட்ட மிடுவதில் முக்கிய பொறுப்பு வகித்துவரும் பென்டகன் ஆலோசகர் றிச்சர்ட் பேர்லே தனது பதவியிலிருந்து விலகி யுள்ளார்.

பென்டகனில் பாதுகாப்புக் கொள்கை வகுப்புச்சபைத்தலை வரான இவரது பதவிவிலகலை அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ஏற்றுக்கொண்டார்.

**அமெரிக்கா பிரிட்டன் உள்ளிட்ட கூட்டுப்படைகளின் ஈராக் நோக்கிய தரைவழி முன் நகர்வுகள் மேலும் காலதாமதம் அடையும் நிலை உருவாகியுள்ளது. களமுனைப் பகுதியிலுள்ள கூட்டுப்படை வட்டாரங் களிலிருந்தும் செய்தியாளர்களையும் மேற்கோள் காட்டி இது தெரிய வந்துள்ளது.**

பாக்தாத் நோக்கி முன்னேறும் தரைவழித் தாக்குதல்கள் மேலும் பல வாரங்கள் நிறுத்தி வைக்கப் படும் வாய்ப்புக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

ஏற்கெனவே ஆறு நாட்கள் தரைவழி நகர்வு நிறுத்தி வைக் கப்படுவதாக அறிவிக்கப்பட்ட நிலையில் கூட்டுப்படைக் கட்ட மைப்புக்குள் பல்வேறு நெருக்கடி களும் முரண்பாடுகளும் தலை தூக்கியுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது.

இந்நிலையில், விநியோக நட வடிக்கைகளும், கடும் ஈராக்கிய எதிர்ப்பும், இந்தப் படை நகர்வு மேலும் பின்தள்ளப்படுவதற்கான பிரதான காரணங்கள் என அமெ ரிக்க துருப்புக்கள் தெரிவிப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

மேலும், ஈராக்கிய இராணுவ மும் கடுமையாக எதிர்த் தாக்குதல் களை கூட்டுப் படையினருக்கு எதிராகத்தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. இதனைக் களமுனை களில் நிற்கும் செய்தியாளர்கள் உறுதி செய்துள்ளனர்.

தொடர்ச்சியான அமெரிக்க கூட்டுப்படைத் தாக்குதல்களுக்கு எதிராக நேற்று ஈராக்கிய படை யினர் மேற்கொண்ட நடவடிக்கை யில் இரண்டு டாங்கிகளும் ஒன் பது கவச வாகனங்களும் முற்றாக சேதப்படுத்தப்பட்டுள்ளதாக ஈராக் அறிவித்துள்ளது.

ஈராக்கிய இராணுவம் இவ்வா றான பதில் தாக்குதலை நடத்தி வருவதையிட்டு அமெரிக்க அதி காரிகள் ஆச்சரியம் அடைந்துள் ளனர் என்றும் ஈராக்கிய அதிகாரி கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பாக்தாத்தில் இருந்து எண்பது கிலோ மீற்றர் தொலைவில் கூட்டுப்படைகள் முகாமிட்டுள்ளதாக அமெரிக்க சனாதிபதி தெரிவித்துள்ளார்.



விமானக் குண்டு வீச்சில் சேதமுற்ற தனது வீட்டின் இடி பாடுகளிடையே அமர்ந்திருக்கும் ஈராக்கிய வயோதிபர்

## 12 ஆவது நாளாகத் தொடரும் விமான, ஏவுகணை தாக்குதல்!

ஈராக்கின் பாக்தாத் மீதான அமெரிக்க கூட்டுப்படைகளின் தாக்குதல் நேற்று 12ஆவது நாளாக தொடர்ந்து நடைபெற்றது.

நேற்றுக்காலை பாக்தாத்தில் உள்ள 11மாடி தகவல் அமைச்சு கட்டடத்தின் மீது குரூஸ் ஏவு கணை கொண்டும், சனாதிபதி சதாம் ஹுசைனின் மகள் தங்கி உள்ள மாளிகையின்மீது விமான மூலமாகவும் தாக்குதல் நடத்தப் பட்டுள்ளன.

மத்திய ஈராக்கில் மூன்று குண்டு கள் வீழ்ந்து வெடித்ததனால் பெருமளவு சேதம் ஏற்பட்டது என் றும் தீச்சுவாலையும் வானத்தில் புகைமண்டலமும் நிறைந்து காணப்பட்டது என்றும் தெரிவிக் கப்படுகின்றது.

குறித்த இலக்கை ஏவுகணை கள் தாக்கி உள்ளனவா? என்பது பற்றி எதுவும் கூறமுடியாதுள்ள தாக அமெரிக்க இராணுவ அதி காரிகள் தெரிவித்துள்ளனர்.

## ஈராக்கை அமெரிக்கா குறைத்து மதிப்பிட்டுவிட்டது!

### அவுஸ்திரேலியா கூறுகிறது

(சிட்னி)

ஈராக் இராணுவத்தின் போராட்ட திறனை அமெரிக்கா குறைத்து மதிப்பிட்டுள்ளதாக அவுஸ்திரேலியா கூறுகின்றது.

ஈராக் இராணுவத்தின் கெரில்லா போராட்ட முறைகள் அமெரிக்க இராணுவத்தின் முன் னேற்றத்தை தாமதப்படுத்தியுள்ள தாகவும் அவுஸ்திரேலிய பாது காப்பு அமைச்சர் தெரிவித் துள்ளார்.

ஈராக்கின் இவ்வாறான எதிர்ப் புக்கு இடையில் அமெரிக்க இராணுவத்தின் பாக்தாத் மீதான முற்றுகை தொடர்வதாகவும் இந்த முற்றுகையின் போது ஆயிரக் கணக்கான ஈராக் துருப்புக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று அவர் குறிப்பிட்டார்.

## போர்த்திட்டம் சரியானதே

### -றொமி பிராங்

எங்களுடைய போரின் அடிப் படைத் திட்டம் சரியானது. ஆள், ஆயுத பற்றாக்குறை எதுவும் தற்போது ஏற்படவில்லையென கட்டாரிலுள்ள அமெரிக்க மத்திய கட்டளைப் பணியக அதிகாரி ரொமிபிராங் தெரிவித்துள்ளார்.

எதிரிகளைப் பற்றித் தவறாக கணிப்பிடவில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## ஈராக் பிரச்சினைக்குப் பின்னர் இந்திய-பாகிஸ்தான் பிரச்சினை!

### - கொலின் பவல் கூறுகிறார்

ஈராக் பிரச்சினை தீர்க்கப்பட்ட பின்னர் இந்திய-பாகிஸ்தான் பிரச் சினையை அணுக முடியும் என தான் நம்புவதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜெனரல் கொலின் பவல் தெரிவித்துள்ளார்.

இந்திய-பாகிஸ்தான் பிரச்சினையானது விரிவான நட வடிக்கையொன்றின் பகுதியாகும். ஈராக் பிரச்சினையை தீர்த்த பின்னர் இந்தப் பிரச்சினையை ஆராய அமெரிக்கா திட்டமிட்டு வருகிறது என்று 'நியூயோர்க் டைம்ஸ்'சுக்கு அளித்த பேட்டியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### ட்ரக் வண்டி மோதி 13 படையினர் காயம்!

குவைத்தில் நேற்று இராணுவ வண்டியொன்று மோதித் தள்ளி யதில் 13 அமெரிக்க இராணுவத் தினர் காயமடைந்தனர்.

வரிசையாக நின்றிருந்த இராணுவத்தினர் மீதே இந்த ட்ரக் வண்டி மோதியது.

## யுத்த ஆதரவுவீழ்ச்சி!

(லண்டன்)

ஈராக்கிய யுத்தம் ஆரம்பிக் கப்பட்ட பின்னர் முதல் தடவையாக இந்த யுத்தத்திற்கான பிரிட்டிஷ் மக்களின் ஆதரவு வீழ்ச்சி கண் டுள்ளது.

'டெயிலி டெலிகிராப்' பத்திரிகை நடத்திய மதிப்பீட்டு அறிக்கையில் மார்ச் 27 ஆம் திகதி 59 சதவீதமானவர்கள் ஈராக்கிய யுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்திருந்த போதிலும் நேற்று முன்தினம் இவர்களினது எண்ணிக்கை 54 சதவீதமாக வீழ்ச்சி கண்டுள்ளது.



உம் கசார் துறைமுகப்பகுதியில் கடற்கண்ணிகள் கண்டு பிடிக்கும் பயிற்றப்பட்ட டொல்பின் இன மீனுடன் பிரிட்டிஷ் கடற்படையினர்.



ஈராக் பாலைவனம் ஒன்றில் அமெரிக்க CH-47 உலங்கு வானூர்தி ஒன்று படையினரை தரையிறக்குகிறது.

## உலகை அச்சுறுத்தும் வைரஸ் காய்ச்சல் தீவிரம் பெறுகிறது!



ஹொங்கொங்கின் வைரஸ் காய்ச்சலில் இருந்து பாதுகாக்க குழந்தை ஒன்றின் முகம் மூடிக்கட்டப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் வைரஸ் காய்ச்சல் அச்சுறுத்தல் அதி கரித்து வருகிறது. சுமார் 60 பேர் அண்மைக்காலத்தில் உயிரிழந் துள்ளதோடு 1600 பேருக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள் ளனர்.

கனடாவில் நான்கு பேர் வைரஸ் காய்ச்சலால் மரண மாகினர். அதேபோன்று சிங் கப்பூரில் நேற்று முன்தினம் மட்டும் மூவர் உயிரிழந்தனர். சீனாவின் ஹொங்கொங் நகரில் 650 பேர் வரை பாதிக்கப் பட் டுள்ளனர்.

மேலும், ஹொங்கொங், சிங்கப்பூர் பகுதிகளில் பாட சாலைகள் அனைத்தும் மூடப் பட்டு சுகாதார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

## அயோத்தி விவகாரத்தில் மத்திய அரசின் வேண்டுகை உச்சநீதிமன்றால் நிராகரிப்பு

(புதுடில்லி)


அயோத்தியில் சர்ச்சைக்குப் படாத 67 ஏக்கர் நிலப்பரப்பில் சமயசார்பான நடவடிக்கைகளுக்கு உச்சநீதிமன்றம் விதித்துள்ள தடையை நீக்கவேண்டும் என்று கோரி மத்திய அரசு தாக்கல் செய்த மனுவை, உச்ச நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்துள்ளது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி எஸ். ராஜேந்திர பாபு தலைமையிலான ஐந்து நீதிபதி களைக்கொண்ட அரசியல் சாச னப்பிரிவு அயோத்தி நிலத்தின் உரிமை தொடர்பான வழக்குகள் மீது அலகபாத் உயர் நீதிமன் றம் தீர்ப்பளிக்கும்வரையில் கடந்த ஆண்டு மார்ச் 13, 14 ஆம் திகதி களில் உச்ச நீதிமன்றம் அளித்த உத்தரவு அமுலில் இருக்க வேண் டும் என்று தாங்கள் கருதியதாகக் கூறியது.

வகுப்பு நல்லிணக்கத்தை பராமரிப்பதற்கு மட்டுமல்லாமல் மற்றைய கடமைகளையும் நிறைவேற்றுவதற்காக, மத்திய அரசின் மனு நிராகரிக்கத்தக்கது என்று நீதிமன்றம் கூறியுள்ளது.

# மீள்குடியமரும் மக்களிற்கான உதவித் திட்டங்கள்

## நன்கு திட்டமிடப்பட வேண்டும்



கனகபுரச்சோதி

கிளிநொச்சி மாவட்டத்தின் குறிப்பாக கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பெருமளவில் மக்கள் மீளக் குடியமர்ந்துள்ள இந்நிலையில் மேற்படி மக்களுக்குத் தற்போது முதற்கட்டமாக உணவற்ற நிவாரணப் பொருட்கள் வழங்கப் பட்டு வருகின்றதனைக் காணக் கூடியதாக வுள்ளது. இந்தப்பொருட்களின் விநியோகம் குறித்து கரைச்சிப் பிரதேச செயலர் பொன். நித்தியானந்தம் அவர்களிடம் வினவிய பொழுது அபிப்பிராயம் தெரிவிக்கையில்;

சத்ஜெய இராணுவ நடவடிக்கை காரணமாக கிளிநொச்சி நகர் மற்றும் அதனை அண்டிய கிராமத்து மக்கள் யாவரும் தங்களது சகல உடமைகளையும் இழந்த நிலையில் வதிவிடங்களை விட்டு வெளியேறிப் பலவருடங்களாக பல தரப்பட்ட இன்னல்களுக்கு முகம் கொடுத்து மீண்டும் தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்பி மீளக்குடியமர்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கு தற்போது சர்வதேச. உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவிகள் வழங்க முன்வந்துள்ளதுடன் மீள்குடியேறிய சில கிராமங்களுக்கு முதற் கட்டமாக உலர் உணவற்ற நிவாரணப் பொருட்களை வழங்கி வருகின்றன அத்துடன் அனைத்து மீள்குடியேற்ற மக்களுக்கும் மேற்படி பொருட்களை கட்டம் கட்டமாக வழங்கவும் நிறுவனங்கள் முன்வந்துள்ளமையானது வரவேற்கக் கூடிய விடயமாகும்.

மேற்படி நிவாரணப் பொருட்களை வழங்கும் நிறுவனங்கள் தரமானதும், மக்களின் நீடித்த பாவனைக்கும் உகந்த பொருட்களை வழங்கும் போதுதான் இப்படியான விநியோகத்தின் பயனை மக்கள் அனுபவிக்க முடியும்.

அன்று மக்கள் இராணுவ நடவடிக்கை காரணமாகப் புலம்பெயர்ந்து அல்லலுற்ற வேளையில் உடனடித் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் கூரைவிரிப் புக்கள், பிளாஸ்ரிக் பொருட்கள் என்பன வற்றினை நிறுவனங்கள் வழங்கிவந்தன. அன்றைய அவல நிலைமையும். அவசர தேவையின் பொருட்டு நிறுவனங்களின் இவ்வுதவியானது மக்களுக்கு ஒருவரப் பிரசாதமாக அமைந்திருந்தமை குறிப் பிடத்தக்கது.

ஆனால் இன்று அப்படியான நிலைமை யின்றி மக்கள் மீளவும் தங்கள் சொந்தக் கிராமங்களில், சொந்த இடங்களில் நிரந்தர மாக மீளக்குடியமர ஆரம்பித்துள்ளனர்.

தற்போது இவர்கள் மீளவும் தமது இருப்பிடங்களைப் புனரமைத்து தமது குடும்ப ஜீவனோபாயத்தினை மேற்கொள் வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில். இவர்களுக்கு வழங்கப் படும் உணவற்ற நிவாரணப் பொருட்கள் என்பது நீடித்தகால பாவனைக்கு உகந்த தாகவும், சுகாதாரத்தினைப் பேணக்கூடிய வகையிலும், வழங்கப்பட வேண்டு மென்பதே எனது அவாவாகும்.

குறிப்பாக சர்வதேச சுகாதார ஸ்தாபனங் கள் இன்று பிளாஸ்ரிக், பொலித்தீன் பாவனை மக்களுக்கு பாரிய சுகாதார பின் விளைவுகள் ஏற்படக் காரணியாக அமைந் துள்ளதென அறிவுறுத்தல்களை விடுத்து வருகின்றன.

இந்நிலையில், மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு உணவற்ற நிவாரணப் பொருட் களை வழங்க முன்வந்துள்ள நிறுவனங்கள் பிளாஸ்ரிக் தவிர்ந்த மக்கள் பாவனைக் கேற்ற பொருட்களை அதாவது. மக்களின் நீடித்த பாவனைக்கேற்ற வகையில் பொருட்களை வழங்க முன்வர வேண்டும்.

இன்று சில அரசசார்பற்ற நிறுவனங்கள் மக்களுக்கு வழங்கும் உணவற்ற நிவா ரணப் பொருட்களில் கூடிய வகையில் பிளாஸ்ரிக்கினால் செய்யப்பட்டவற்றை வழங்குவதனைத் தவிர்த்து வருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

இந்த வகையில் அண்மையில் ஸ்பானிய செஞ்சிலுவைச் சங்கமும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்த (எக்கோ) திட்ட மூலம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி. முல்லைத்தீவு. வவுனியா மாவட்டங்களில் மீளக்குடியமர்ந்துள்ள ஒரு தொகுதி மக் களுக்கு உலர் உணவற்ற பாவனைப் பொருட்களை வழங்கியுள்ளது. இது மக் களின் வரவேற்பை பெற்றிருப்பதனைக் காணக்கூடியதாகவுள்ளது.



இந்நிறுவனம் வழங்கும் பொருட்கள் ஒரு குடும்பத்திற்கு மீள் குடியேறும்போது அவர் களுக்குப் பாவனைக்கு உடன் தேவையான தும். நீடித்த கால பாவனைக்குகந்த அத்தி யாவசியமானதுமான பொருட்கள் இவற்றில் அடங்கியுள்ளன.

இது உண்மையிலேயே வரவேற்கக் கூடியதொன்றாகும். இதேபோன்று இப்படி

(7ஆம் பக்கம் பார்க்க)

# கவனம்... கவனம்...

## மிதிவெடி மற்றும் வெடி பொருட்களிலிருந்து...

கண்ணிவெடி விழிப்புணர்வு வாரம் இன்று ஆரம்பமாவதை முன்னிட்டு இக்கட்டுரை வெளியாகின்றது.

இன்று உலகின் யுத்தம் நடக்கும் பல்வேறு நாடுகளில் யுத் தத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப் பினரும் தம்மைத் தாமே பாது காத்துக் கொள்வதற்கும் எதிரியை செயலிழக்கச் செய்வதற்கு அல்லது முடமாக்குவதற்கு இந்த நிலக்கண்ணிவெடிகள் பாரிய அளவில் பயன்படுத்தப்பட்டுக் கொண்டு வருகின்றன. முக்கிய மாக உலகில் 64 நாடுகளில் 115,000,000 நிலக்கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. இதைவிட 10 கோடி நிலக்கண்ணி வெடிகள் பாவனைக்காக இருப்பில் உள் ளன. 20 இலட்சம் நிலக் கண்ணிவெடிகள் வருடாந்தம் புதைக்கப்படுகின்றன. அத்தோடு உலகில் 800 பேர் மாதாந்தம் இறக்கின்றார்கள். 1975ஆம் ஆண்டில் இருந்து 10 இலட்சத் திற்கும் மேற்பட்டவர்கள் நிலக் கண்ணி வெடிகளால் காயப் பட்டோ அல்லது இறந்தோ உள்ளனர்.

இதேபோன்று இலங்கையிலும் விசேடமாக வன்னி நிலப்பரப்பின் பெரும் பகுதிகளில், ஆயிரக் கணக்கான மிதிவெடிகள் யுத்தம் நடந்த பிரதேசங்களிலும், இராணு வம் நிலைகொண்டிருந்த பிர தேசங்களிலும் புதைக்கப்பட்டுள் ளன. இவற்றிலிருந்து பாதுகாப் பும், எச்சரிக்கையும் எமது மக் களுக்குத் தேவைப்படுகின்றன. இவற்றில் மிதிவெடிகள், வெடி பொருட்கள் மிக முக்கியம் வாய்ந்ததாகும்.

எனவே, வெடிக்கும் பொருட் களின் வகைகளைப் பார்க்கும் போது எறிகணைகள், மோட்டார் குண்டுகள், கைக்குண்டுகள், கண்ணிவெடிகள் என நாலு பிர தான வகைகளாகப்பிரித்து நோக்க லாம். இதில் கண்ணிவெடிகளின் கீழ் நிலக்கண்ணிவெடிகள், கிளை மோர் கண்ணிவெடிகள், கடல் கண்ணிவெடிகள் போன்றவை அடங்கும். இவற்றில் நிலக் கண்ணிவெடியின் கீழ் தனி நபருக்கு எதிரான கண்ணிவெடி கள் (இந்த வகையில் தான் மிதி வெடிகள் அடங்கும்) இதைவிட தாங்கிகள், , வாகனங்களுக்கு எதிரான கண்ணிவெடிகளும் இந்த நிலக் கண்ணி வெடிகளுக்குள் பிர தானமாகும்.

எனவே, இங்கு முக்கியமாக மிதிவெடிகள் எவ்வாறு எமது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகவுள் ளது என்பதையும். இதேபோன்று வெடிபொருட்களினால் ஏற்படும் பாதிப்புக்கள், அவற்றின் பாது காப்பு தொடர்பாக இங்கு நோக்கு வது சிறந்தது.

மிதிவெடிகள் வெடிக்கும் பொருட்களைக் கொண்டுள்ளவை. இவை மனிதன்.விலங்குகள். வாக னங்கள் அருகில் செல்வதாலும் அல்லது விசைகளினால் தூண்டப் படுவதினாலும் அவைகள் வெடிக் கின்றன. அதாவது. இவைகள் வெடிப்பதினாலும் வெடித்துச் சிதறும் துண்டுகளினாலும் மனிதன். விலங்கு. வாகனங்கள் பாதிப்புக்கு உள்ளாகும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை கள் நிலமேற்பரப்பில் இருந்து 15 சென்ரி மீற்றருக்குள் புதைக்கப்படு கின்றன. மிதிவெடிகள் நேரடி யான அமுக்கம். தடுக்கி விழக் கூடியவயர்கள், இயக்க விசைகள் போன்றவற்றால் வெடிக்கின்றன. யுத்தத்தில் ஈடுபடுவோர் எதி ரணியின் போர்ப்பலம், அரசியல் சமூக பொருளாதார அடிப்படை களைச் செயலிழக்கச் செய்யும் வகையில் பொதுமக்களுக்குச் சொந்தமான பயிர் செய்யும் நிலம், நீர் நிலைகள், பிரதான வீதிகள், பாடசாலைகள், வீடுகள் போன் றவை இலக்குக்கு உள்ளாக்கப்படு கின்றன.



குறிப்பாக, கைவிடப்பட்ட இராணுவ நிலைகளைச் சுற்றியும் சிதைக்கப்பட்ட வாகனங்கள், பிர தேசங்களிலும் பாவிக்கப்படாத நடைபாதைகளின் இருமருங் கிலும், வாகனங்கள் திரும்புகின்ற இடங்கள், கட்டடங்களின் சுவர் பக் கங்கள், குறிப்பாக வாசல் பகுதி மதகுகள், பாலங்கள், கிணற்றைச் சுற்றிய பகுதிகள் அல்லது நீர் பெறுகின்ற இடங்களிலும், மக்கள் ஒளிந்து இருக்கக்கூடிய அல்லது மறைந்திருக்கக்கூடிய தாழ்வான பகுதிகளிலும் காணப்படலாம். இத் தோடு கைவிடப்பட்ட இராணுவ நிலைகள், முகாம் பகுதிகளிலே அல்லது அதை அண்டிய இட களிலோ இறந்த விலங்குகள், கைவிடப்பட்ட பயிர் செய்யும் நிலங்கள், வெற்று ஆயுத கொள் கலன்கள் அல்லது ரவைகள் காணப்படும் இடங்கள் மிதிவெடி கள் இருப்பதற்கான சாத்தியம் அதிகமாக உண்டு.

மேலும், மிதிவெடிகள் பொதுவாக மறைக்கப்பட்டோ அல்லது புதைக்கப்பட்டோ இருப்பதனாலும் சுற்றாடலுக்கு இசைந்த நிறங்களைக் கொண்ட வையாக இருப்பதனாலும் இவற்றை அடையாளம் காண்பது கடினமாகும். அதேவேளை, ஏற்கனவே எச்சரிப்புப் பலகைகள், சுலோகங்கள். மிதிவெடி அபாயம் உள்ளது என்பதைக் காட்டும் பட்டிகள், வேலிகள் போன்ற வற்றுக்கு அப்பாலோ அல்லது அருகிலோ செல்லக்கூடாது அதே வேளை.இவ்வாறான சமிக்கைகள் அல்லது எச்சரிக்கைகள் இல்லாத இடத்தில் மிதிவெடி அபாயம் இல்லை எனவும் கருதக்கூடாது.

மிதிவெடிகள் தொடர்பாக நீங் கள் செய்ய வேண்டியது. அதா வது. உங்களுக்கு அறிமுகமில் லாத பொருட்கள் தொடர்பாகக் கவனமாக இருங்கள். அதன் வடி வங்கள். நிறங்கள். வடிவமைப்பு களில் அவற்றை தொட்டுப்பார்த் தல், எடுத்துப்பார்ப்பதில் அக் கறை காட்ட வேண்டாம். அத் தோடு இப்பிரதேசக் காணிகளில் காணப்படும் வயர்கள். கம்பிகள் போன்றவற்றை இழுத்தல் அல்லது வெட்டுதல் ஆபத்தான நடவடிக்கையாகும். மேலும் கைவிடப்பட்ட பிரதேசங்களில் உள்ள பாவிக்கப்படும் பாதைகள் தவிர அவற்றின் இரு பக்கங் களிலும் எந்த நோக்கத்திற்காகவும் அதாவது இயற்கை


(5.ஆம் பக்கம் பார்க்க)

# மின் அஞ்சல்

**இணையத்தின் பயன்கள் பல எனச் சென்றவாரம் பார்த்தோம். முக்கியத்துவம் கருதி மின் அஞ்சல், மின் வணிகம் என்பன பற்றி இம்முறை சற்று விரிவாகப் பார்ப்போம்.**

## மின் அஞ்சல்

இணையத்தில் பல முக்கியமான செயற்பாடுகள் உள்ளன எனப் பார்த்தோம். இவற்றிலே முக்கியமானது மின் அஞ்சலாகும். e-Mail என்று ஆங்கிலத்தில் இது அழைக்கப் படுகின்றது. இணையத்தைப் பயன்படுத்துவோர் இந்த மின்



அஞ்சல் வசதியைப் பயன்படுத்தாது விடுவதில்லை. இணைய இணைப்புப் பெறுவோருக்கு இந்த வசதி இலவசமாகவே வழங்கப்படுகின்றது. இது நாம் சாதாரண தபால் மூலம் தகவல் பரிமாற்றம் செய்து கொள்வதைப் போன்றதாகும். எனினும், இதில் பல முன்னேற்றமான பயன்கள் உண்டு.

**01**) தபால் திணைக்களத்தினூடாக அனுப்பும் அஞ்சல்களை விட மலிவானதாகும்.

**02**) சாதாரண தபாலைவிட விரைவானது. நாம் மின் அஞ்சலை அனுப்பிய அடுத்த விநாடியே நாம் அனுப்பிய முகவரியை மின் அஞ்சல் சென்றடைந்துவிடும்.

**03**) மின் அஞ்சலை முகவரிக்குரியவர் அவரது சொந்த இடத்தில் இருந்தால்தான் பார்வையிட முடியும் என்பதில்லை. ஏனெனில், இந்த மின் அஞ்சல் உலகளாவிய இணைப்பைக் கொண்ட கணினியொன்றின் நினைவகப்பகுதியில் சேமித்து வைக்கப்பட்டிருப்பதால் உலகின் எந்த மூலையிலுள்ள இணைய இணைப்பின் மூலமும் அஞ்சலைப் பார்வையிடலாம்.

**04**) குறிப்பிட்ட தகவலை ஒரே நேரத்தில் பலருக்கு தகவல் அனுப்பக் கூடிய வசதியும் மின் அஞ்சலில் உண்டு. தகவலை கணினியில் பதிவு செய்தபின் அனுப்ப வேண்டிய முகவரிகளைக் கணினிக்கு வழங்கினால் அது அனைத்து முகவரிகளுக்கும் மின் அஞ்சல்களை அனுப்பிவைக்கும்.

**05**) மின் அஞ்சலில் எழுத்து வடிவங்களை மட்டுமல்ல, படங்கள், ஒளி, ஒலி வடிவிலான தகவல்கள் கணினிக்கோப்புகள் என்பனவற்றையும் அனுப்ப முடியும்.

எனினும் இதிலும் சில குறைபாடுகள் இல்லாமல் இல்லை.

**01**) மின் அஞ்சல் குறிப்பிட்டவருக்குப் போய்ச் சேராமல் இருக்க வாய்ப்பு உண்டு.

**02**) மின் அஞ்சலைக் குறிப்பிட்டவர் பார்வையிடாமல் போகவும் கூடும். அதாவது, சாதாரண தபால் ஒருவரது கையில் கிடைக்குமாயின் அவர் அதனை உடனடியாகப் பார்வையிடுவார். ஆனால், மின் அஞ்சல் கணினியின் நினைவுப் பகுதியில் பதிந்து வைக்கப்பட்டிருப்பதால் அதனை அவர் பார்வையிடாமல் போகவும் வாய்ப்பு உண்டு. கிரமமாக தனக்கு மின் அஞ்சல் உள்ளதா? எனப் பார்வையிட வேண்டியது அவசியமாகும்.

இப்பொழுது மின் அஞ்சல்களை பல மொழிகளில் அனுப்பக் கூடிய மென் பொருட்கள் உள்ளன. இந்த வகையில் இப்பொழுது மின் அஞ்சல்களை தமிழிலும் அனுப்ப முடியும். இதற்கான பல மென்பொருட்களை இணையத்திலிருந்தே இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

மின் அஞ்சல் மூலம் வாழ்த்து அட்டைகளை அனுப்ப முடியும். பல இணையத் தளங்கள் இந்த வாழ்த்து அட்டைகளைத் தயாரிக்க உதவி புரிகின்றன. இதற்குத் தேவையான படங்கள், வாசகங்கள் என்பனவற்றை இவை வழங்குகின்றன. இவற்றைத் தெரிவுசெய்து இணைக்கின்ற வேலையை மட்டுமே இணையப் பயன்பாட்டாளர் செய்ய வேண்டும். இதனால் கணினியில் வரைபடங்களை வரையத் தெரியாதவரும் அழகான வாழ்த்து அட்டைகளைத் தயாரித்து அனுப்பிவைக்க முடியும்.

இதேவேளை, கணினிகளுக்குள் நாம் விரும்பாமலே புகுந்து கணினியில் உள்ள தகவல்களை மாற்றி அழித்து நாசவேலை செய்யும் கணினி வைரசுகளும் மின் அஞ்சல் மூலம் பரவக்கூடிய வாய்ப்புகள் உண்டு. மின் அஞ்சல் முகவரியை வெளிப்படையாக அனைவருக்கும் அறிவிக்க வேண்டிய நிலையிலுள்ள நிறுவனங்கள் அமைப்புகளுக்கு இந்த ஆபத்து அதிகம் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இப்போது மின் அஞ்சலை அனுப்ப உதவும் பல இணையத்தளங்கள் பயன்பாட்டில் உள்ளன.

## மின் வணிகம்

உலகில் பல வர்த்தக நிறுவனங்கள் இ-வணிகத்தில் இணைந்துள்ளன. இது வளர்ச்சியடைந்த நிறுவனங்களில் சர்வசாதாரணமாகக் காணப்படுகின்றபோதும் வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் கூட இதில் இணைந்துவரும் நிறுவனங்களின் தொகை அதிகரித்து வருகின்றது.




இணையமானது ஆரம்பகாலத்தில் வர்த்தக நிறுவனங்கள் தமது பொருட்களை விளம்பரப்படுத்துவதில் பயன்படுத்தப் பட்டது. இதன் மூலம் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடும் நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களுக்கு உலகளாவிய ரீதியிலான விளம்பரம் இலகுவானதாக இருந்தது வர்த்தகத் தகவல்கள் உலகளாவிய ரீதியில் வேகமாகப் பரவத் தொடங்கின.

பின்னர் இணையம் உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கும் கொள்வனவு செய்யும் நிறுவனங்களுக்கும் இடையில் ஏற்படுத் தப்பட்ட தொடர்பான பொருள் வாங்கல், விற்றல் பணப்பரிமாற்றம், என்பனவற்றுக்கும் உதவியது.




நாம் சாதாரணமாக ஒரு வர்த்தக நிறுவனத்திற்குச் சென்று பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது பொருட்களை நேரடியாகப் பார்வையிட்டு அவை பற்றிய விபரம், தரம், விலை என்பனவற்றை அறிந்து கொண்டு பேரம் பேசியும் பொருட்களை பணம் அல்லது காசோலையைக் கொடுத்துப் பெற்றுக் கொள்கிறோம்.

அதேபோல இங்கு உற்பத்தி நிறுவனங்கள், அல்லது விற்பனை நிலையங்கள் தமது பொருட்களை அவற்றின் விபரங்கள், விலை என்பனவற்றை தமக்குரிய இணையத் தளத்தில் பார்வைக்கு வைக்கின்றன. அவற்றை வீட்டிலிருக்கும் இணைய இணைப்பு மூலம் பார்வையிட முடியும். இவற்றைப் பார்வையிட்டபின் அவற்றைப் பேரம் பேசி விலையைத் தீர்மானிக்கக் கூடிய வசதியும் உண்டு. இவ்வாறு கொள்வனவு செய்யத் தீர்மானித்துவிட்டால் அதனை கடன் அட்டை மூலம் பணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். அப் பொருட்களை வீட்டிற்கே எடுத்து வந்து விநியோகிக்கும் வசதிகளையும் பல நிறுவனங்கள் ஏற்படுத்தித் தருகின்றன.

### அறிவியல் உலகம்

இதன் மூலம் வேறொரு நாட்டிலுள்ள ஒருவருக்கு அன்பளிப்புப் பொருளைக் கூட அனுப்பிவைக்க முடியும். இணைய மூலம் தெரிவுசெய்த பொருளுக்கு கடனட்டை மூலம் பணத்தைச் செலுத்தியபின் உரியவரின் முகவரிக்கு

**சி. சிவாகரன்**

அதனை விநியோகிக்க முடியும்.

இவ்வாறான சேவையைக் கொண்ட நிறுவனங்கள் எவை யெனத் தேடித்தரக்கூடிய இணையத்தளங்கள் பல உள்ளன.

---

## கவனம்....

அழைப்புக்காகக் கூட இறங்க வேண்டாம். சாரதிகள் இப்பாதையில் வாகனங்களைச் செலுத்தும் போது வாகனங்களை முந்திச் செல்லவோ அல்லது விலத்திச் செல்வதிலோ மிகக் கவனமாக நடந்து கொள்ளுங்கள். அவசரங்காட்டாது அதிவேகத்தில் செல்லாதிருங்கள். ஏதாவது சம்பவம் இடம்பெறும் பட்சத்தில் மிகக் கவனமாக நடந்து கொள்ளுங்கள் உடனடியாகப் பாய்ந்து விழுந்தடித்து சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு செல்வதற்கு முயற்சிக்க வேண்டாம். அத்தோடு கைவிடப்பட்ட பிரதேசங்களில் காணப்படும் முட்கம்பிகள், கட்டடப் பொருட்கள், வெற்று ரவைகள், மரங்கள் போன்றவற்றை எடுப்பதற்கு முயற்சிக்க வேண்டாம். மேலும் இவ்வாறான பிரதேசங்களுக்குச் செல்லும் போது அப்பிரதேசங்களில் அறிமுகமான தெரிந்த உள்ளூர் வழிகாட்டுனர்கள் இல்லாமல் காணிபார்க்கச் செல்லுதல் வாகனங்களை செலுத்துதல், போன்றவற்றை முக்கியமாகத் தவிர்க்க வேண்டும். மேற்கூறிய விடயங்களில் அதிக கவனமும் எச்சரிக்கையும் காட்டாத சந்தர்ப்பங்களால் எமது பகுதிகளில் நூற்றுக்கணக்கானோர் உயிர் இழந்ததுடன் அங்கவீனர்களாகவும் மாறியுள்ளமை எமக்கு மிகப்பெரிய படிப்பினையாகும்.

அடுத்து, வெடிக்கும் பொருட்கள் தொடர்பாக நோக்கும் போது இதையும் முன்பு கூறப்பட்டது போன்று பொது அறிவுடனும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலமும் இதனால் ஏற்படக்கூடிய அபாயத்தையும் அச்சுறுத்தல்களையும் குறைக்க முடியும். வெடிக்கும் பொருட்களாக மோட்டார் குண்டுகள், எறிகணைகள், கிளைமோர் கண்ணிவெடி, ரவைகள், ஆட்டிலறி எறிகணைகள், கிரனைட்டுக்கள், விமானக்குண்டுகள், மிதிவெடிகள் போன்றவற்றைக் கொள்ளமுடியும். இவைகள் பாவிக்காமல் கைவிடப்பட்டவையாகவோ அல்லது ஒரு பகுதி சேதம் அடைந்ததாகவோ காணப்படலாம். எந்த வகையான வெடிப்பொருட்களாக இருந்தாலும் அவை மிக ஆபத்தானவையும் உயிர்ச் சேதங்களையும் விளைவிக்கக் கூடியவை. இவை தொடர்பாக மிகுந்த கவனம் தேவை. அத்தோடு ஒரு போதும் அவற்றைத் தொடுவது, விளையாட்டுப் பொருளாகப் பாவிப்பது, அழகு பொருட்களாகப் பாவிப்பது, பரீட்சித்துப் பார்ப்பது போன்ற நடவடிக்கைகளை முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

இத்தகைய வெடிபொருட்கள் வெளிப்படையாக ஆபத்தானவையாகத் தோன்றுவது இல்லை. ஒலிச் சத்தங்களோ ஒளிச் சமிக்கைகளோ உங்களுக்கு எச்சரிப்பதற்கு இல்லை. நீங்கள் ஒரு சந்தேகத்திற்கு இடமான இடத்தில் இருப்பதாக உணர்ந்தால் நின்று அமைதியாக சிந்தித்து உங்களுடன் வந்தவர்களுக்கும் எச்சரிக்கை செய்யவும். பின்பு மெதுவாகவும் பாதுகாப்பாகவும் வந்த வழியே சந்தேகமான இடத்திற்கு அடையாளம் இட்டு விலகிச் செல்லவும். பாதுகாப்பான இடத்திற்குத் திரும்பியதும் உங்களால் அறியப்பட்ட அந்த வெடிபொருள் தொடர்பாக அதற்குச் சம்பந்தப்பட்டவர்களிடம் தெரிவிக்கவும். இது ஆபத்தில் இருந்து உங்களைப் பாதுகாப்ப தோடு மட்டுமல்லாமல் ஏனையவர்களையும் பாதுகாக்கும் ஒரு அரிய செயல் ஆகும். இத்தகைய வெடிபொருட்களை எப்போதுமே ஒரு ஆபத்தானவையாக, பயங்கரமானவையாக, அழிவு தரக்கூடியவையாக கருத வேண்டும். ஒரு போதும் ஆபத்தானவை இல்லை என்று நீங்களாகவே கருதி பாதிப்புக்கு உள்ளாக வேண்டாம்.

முக்கியமாக மீளக்குடியமர்பவர்கள் தமது வீட்டுக்கோ அல்லது காணிக்கோ செல்லும் போது சிறுவர்கள், குழந்தைகளை அழைத்துச் செல்வதைத் தவிர்க்கவும். மேலும் ஏற்கனவே பாவிக்கப்பட்ட பாதைகளைப் பாவிப்பதோடு குறுக்குப் பாதைகளைப் பாவிக்க வேண்டாம். அவசரப்பட்டுச் செல்லாது ஒவ்வொரு அங்குலமாகப் பரிசோதித்து மேற்கொண்டு செல்லுங்கள். அத்தோடு உங்கள் பிள்ளைகளுக்கும் அயலவர்களுக்கும் இதனுடைய பாதிப்புகள் பற்றியும் அபாயம் பற்றியும் சொல்லிக்கொடுங்கள்.

# வீதிகள், பொதுக் கிணறுகள் சிரமதான மூலம் சீரமைப்பு

(அலுவலக … ளர்)

தியாகி அன்னை பூபதி அவர்களின் 15ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வினை முன்னிட்டு கிளி/பிரதேச மலையாளபுரம் கிராமத்தில் உள்ள அனைத்து வீதிகளும், பொதுக் கிணறுகளும் அப்பகுதி மக்களால் சிரமதானப் பணி மூலம் துப்புரவாக்கப் பட்டு வருகின்றன.

இப்பணி அப்பகுதி கிராம அலுவலர் த.குணசிங்கம் தலைமையில் நடைபெற்று வருகின்றது.

இச்சிரமதானப் பணியில் தேசிய எழுச்சிப் பேரவை, கமக்கார அமைப்பு, ஊரக வளர்ச்சிப் பணிக்குழு, மாதர் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம் என்பன வற்றின் உறுப்பினர்களும் மக்களும் ஈடு பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இந்திய சமஷ்டி தொடர்பாக ஆராய ஜே.வி.பி, சு.க.குழு இந்தியா செல்லும்

இந்திய சமஷ்டி முறை குறித்து ஆராய சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும், ஜே.வி.பி. உறுப்பினர்களும் இந்தியா செல்லவுள்ளனர். இரண்டு வாரங்களுக்கு முன் சிறிலங்கா சுதந்திரக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தியா சென்ற போது அவர்களுடன் இணைந்து இந்தியாவுக்குச் செல்ல அவர்கள் மறுத்திருந்தனர்.

இப்பொழுது இவ்விருகட்சிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை எட்டுவதற்குத் தயாராக உள்ள நிலையில் இந்திய சமஷ்டி குறித்து ஆராய்வதென முடிவுக்கு வந்துள்ளன.

இதேவேளை, இவ்விருகட்சிகளும் கூட்டுக்குறித்து கூடி ஆராய்ந்துள்ள போதும் முடிவெதுவும் எட்டப்படவில்லை. இதனால் இச்சந்திப்பின் பின்வெளியிடப்படவிருந்த கூட்டறிக்கை தள்ளிப் போடப்பட்டுள்ளது. இந்தச்சந்திப்பில் சனாதிபதி சந்திரிகா கலந்து கொள்ளாமையும் குறிப்பிடத் தக்கது.

## புனரமைக்க முடிவு

உடுத்துறை வேம்படி முத்தமிழ் சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் அதன் செயலாளர் வி. யோகச்சந்திரன் தலைமையில் இடம் பெற்றது. கூட்டத்தில் இராணுவ நடவடிக்கை மூலம் முற்றாகச் சேதமடைந்த சனசமூக நிலையம் புனர்நிர்மாணம் செய்வது என்றும், அந்த நடவடிக்கையை மிக விரைவில் ஆரம்பிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்த ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவும் இடம் பெற்றது. தலைவராக தம்பிராசா முத்துராசா, செயலாளராக வீரசக்தி யோகச்சந்திரன், பொருளாளராக யோகராசா சபேஸ், உபதலைவராக குணரத்தினம் ஜெயசுதன், உபசெயலாளராக இரத்தினசிங்கம் முரளிதரன் உட்பட ஆறு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவாகினர். (11)

## சமகால அரசியல் கருத்துரை

உடையார்கட்டில் தமிழீழ எழுச்சிப் பேரவை உறுப்பினர்களுக்கும், மாதர் சங்க நிர்வாகத்துக்குமான, சமகால அரசியல் கருத்துரை வலய அரசியல் துறையினரால் அண்மையில் வழங்கப்பட்டது.

இந் நிகழ்விற்கு உடையார்கட்டு வடக்கு கிராம அலுவலர் செல்வவினாயகம் தலைமை வகித்தார். இதற்கு சுமார் இருநூற்றுக்கு மேற்பட்டவர்கள் வருகை தந்தனர்.

# திருமலை கோணேஸ்வரர் ஆலய தேர் வெள்ளோட்ட விழா

(திருமலை)

திருகோணமலை கோணேஸ்வரர் ஆலய தேர் வெள்ளோட்ட விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

தேர்த்திருவிழா நாளை மறுதினம் இடம்பெறவுள்ளது. 1624ஆம் ஆண்டு போத்துக்கீசரால் பழைய கோணேஸ்வரர் ஆலயம் இடிக்கப்பட்ட பின்னர், புதிய ஆலயம் 1963ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

இதன் பின்னர் இடம்பெறும் முதலாவது தேர்த்திருவிழா நாளை மறுதினம் இடம் பெறவுள்ளது. (25)

# ப. நோ. கூ. சங்க கிளை திறப்பு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள மண்ணாங்கண்டல் ப.நோ. கூட்டுறவுக் கிளை இல.06 திறக்கப்பட்டுள்ளது.

கடந்த 26ஆம் திகதியன்று முத்துஐயன் கட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர் இ.சற்குணம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிளைக் கட்டட நாடாவினை முல்லை. மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி.மேசியையா வெட்டித் திறந்து வைத்தார். முல்லை. மாவட்ட கூட்டுறவுப் பகுதி களஞ்சிய மேலாளர் வி.மூர்த்தி களஞ்சிய அறை நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார் (05)

## கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

அம்பலப்பெருமாள் சந்தி அக்கராயனைச் சேர்ந்த ம.நி. சாந்தன் என்பருடைய பர்ஸ் (சிறுதொகை பணத்துடன்) வீதியில் கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும். (சோ)

# வீதி நடைமுறைகளைப் பின்பற்ற காவல்துறை அறிவுறுத்து

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி காவல்துறை நகர போக்குவரத்துப் பிரிவினரால் வீதிப் போக்குவரத்து தொடர்பான விதிமுறைக் கருத்தரங்குகள் பாடசாலைகள் ரீதியாகவும், திணைக்களங்கள் ரீதியாகவும் நடாத்தப்பட்டு வருகின்றன.

மேற்படி கருத்தரங்கு நேற்றுக் காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் கிளி/வலய பாடசாலை அதிபர்களுக்கு கிளிநொச்சி காவல்துறை நகரப் போக்குவரத்துப் பிரிவினரால் நடாத்தப்பட்டது.

வலயக் கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிளி.மாவட்ட காவல்துறை மேற்பார்வையாளர் க. கண்ணாளன், நகர போக்குவரத்து பிரிவு மேற்பார்வையாளர் கு.கனகலிங்கம் ஆகியோர் கலந்து வீதி ஒழுங்குகள் குறித்து மாணவர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கும் வகையில் கிளி.வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த 84 அதிபர்களுக்கு மேற்படி கருத்தரங்கு நடாத்தப் பெற்றது. இதேபோன்று நேற்று பளையில் வைத்து போக்குவரத்து கழக சாரதிகள் மற்றும் ஏனைய வாகன சாரதிகளுக்கும் இக்கருத்தரங்குகள் நடாத்தப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ.லோ)


எமது மக்களுக்கு
தமிழீழ வைப்பகம் வழங்கும்
துரித நகையடைவுக்கடன் சேவை

உங்கள் நம்பிக்கையின் சின்னம்

குறைந்த வட்டி வீதம்

மாதாந்தம் 2% வட்டி மட்டுமே தற்போது அறவிடப்படுகின்றது.
(ஆண்டுக்கு வட்டியாக 24 நூற்றுக்கூறு மட்டும் )

கூடிய கடன் தொகை

தற்போது கடன் தொகையாக ஒரு பவுணுக்கு
உரூபா 6300/= வரை வழங்கப்படுகின்றது.

நீடித்த சேவை

தமிழீழ வைப்பகத்தின் சகல கிளைகளிலும் மாலை
3.00 மணி வரை நகையடைவுக்கடன்
சேவையை வழங்குகின்றோம்.

தமிழீழ வைப்பகம்

உங்களின் நிறைவே எங்களின் மகிழ்ச்சி
வாருங்கள் உங்களின் வளமான வாழ்வுக்கு வழிகாட்டுகிறோம்.

தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்

(சி 8038)



**சிந்தனைக்கு**

உலகில் எந்த ஒரு தேசிய சமுதாயமும் இரத்தம் சிந்தாமல், வியர்வை சிந்தாமல், அளப்பரிய தியாகங்கள் செய்யாமல், பேரழிவுகளைச் சந்திக்காமல் சுதந்திரம் பெற்றது கிடையாது.
- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM
யாழ். சாலை, கிளிநொச்சி. 01-04-2003

## அர்ப்பணிப்பிற்குப் பரிசு!

"பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நோபல் பரிசு பெறுவதற்கு முயற்சி செய்கிறார்." "உலகில் தன்னை முக்கிய பங்காளராக நிலை நிறுத்திக் கொள்ள நோர்வேயும், ஐ.நா. பாதுகாப்புச் சபையில் உறுப்புரிமையைப் பெற்றுக் கொள்வதற்கான பரிசோதனைக்களமாகப் பயன்படுத்துவதற்கு ஜப்பானும் இலங்கை விவகாரத்தில் தலையீடு செய்கின்றன". இவ்விரண்டு கூற்றுக்களில் முன்னையது சிறிலங்கா சனாதிபதியினது, பின்னையது அவரது ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமரினது.

உலக சமாதானத்திற்காகப் பங்களிப்புச் செய்பவர்களுக்கு சமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகின்றது. இப்பரிசு பெரும்பாலும் சமாதானத்திற்கான சேவையை அர்ப்பணிப்புடன் வழங்குபவர்களுக்கு வழங்கப்படுவதுண்டு. இப்பரிசு பெறும் பெரும்பாலானோர், இப்பரிசினை நோக்காகக் கொண்டு செயற்பட்டவர்களாக இருந்ததில்லை. அவர்கள் ஆற்றிய சேவைக்காக இப்பரிசு அவர்களைச் சென்றடைகின்றது என்பதே உண்மையாகும்.

இதேவேளை, இப்பரிசை நோக்கமாகக் கொண்டு யாராவது செயற்பட்டிருப்பினும் கூட - அதற்காக அவர்கள் புரிய வேண்டிய அர்ப்பணிப்பும், சேவைகளும் மிகவும் அதிகமாகவே இருக்கும். இந்நிலையில் யாராவது நோபல் பரிசை இலக்காகக் கொண்டு செயற்படுவதாயினும் அதற்கான பெரும் முயற்சி அவசியமாகிறது. இதன் காரணமாக நோபல் பரிசு அவர்களுக்குக் கிடைக்கப் பெறுவது அர்த்தமுள்ளதாகவே ஆகிவிடுகிறது.

ஆகையால், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குறிப்பிடுவது போல், ரணில் விக்கிரமசிங்க நோபல் பரிசிற்கு முற்படுவாரே யானால் அதற்காக அவர் பெரும் அர்ப்பணிப்புக்களைச் செய்ய வேண்டியதாக இருக்கும். சிறிலங்கா அரசியற்சூழ் நிலையைப் பொறுத்து அவர் தனது உயிரையே இதற்காகப் பணயம் வைக்க வேண்டியும் வரலாம். அவ்வாறு அவர் செய்வாரேயானால் அவருக்கு சமாதானத்திற்கான நோபல் பரிசொன்று வழங்கப்படுவதில் தவறெதுவும் இருக்கமாட்டாது.

ஏனெனில், இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று காணப்படுமானால், அதற்காக உழைத்தவர்களுக்கு நோபல் பரிசு வழங்குதல் ஒன்றும் தவறாகமாட்டாது. ஏனெனில் இப்பிரச்சினையானது அத்தனை தூரம் நெருக்கடி மிக்கதும் பெரும் இரத்தம் சிந்தப்பட்டுவிட்டதுமான பிரச்சினையாகும். அதாவது இப்பிரச்சினை சகல தரப்பிலுமாக ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழப்பதற்குக் காரணமாகியுள்ளது.

இதேபோன்று நோர்வே அரசின் மத்தியஸ்துவத்தில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று ஏற்படுத்தப்படுமானால் அது நோர்வேக்கு சர்வதேச ரீதியில் கௌரவத்தையும், முக்கியத்துவத்தையும் பெறுதல் எந்த வகையிலும் தவறாக மாட்டாது. அதாவது நோர்வே அரசு இலங்கையில் சமாதானத்தை நிலை நிறுத்துமானால் அதற்குச் சர்வதேச ரீதியில் கௌரவம் கிடைக்கப் பெறுவதில் எந்தவிதமான மாறுபட்டகருத்தும் இருக்க முடியாது.

ஏனெனில், இனப்பிரச்சினை, சர்வதேச மத்தியஸ்துவம் இன்றி [illegible] முடியாததொரு விடயமாகத் தீவிரம் பெற்றுவிட்டதொன்[illegible]. இதேவேளை, ஏற்கனவே இவ்விவகாரத்தில் தலையீடு செய்த இந்[illegible]வும் தனது முயற்சியில் தோல்வியும் கண்டிருந்தது. இந்நி[illegible]யில் இப்பிரச்சினையில் தலையீடு செய்வதென்பது மிகவும் அவதானத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டியதொன்றாகும்.

ஆகையினால், இவ்விடயத்தில் துணிந்து தலையீடு செய்வதோடு, இதற்கென தமது நேரத்தையும், பொருளையும் செலவீடு செய்துவரும் நோர்வே அரசு, இதன்மூலம் சர்வதேச ரீதியில் பாராட்டு தலைப் பெற்றுக்கொள்ளுதல் என்பது குறை காணப்படக் கூடியதொரு விடயமாக எவ்வாறு இருக்க முடியும்?

அர்ப்பணிப்புக்கள், சேவைகள் எதுவும் அற்ற நிலையில் இருந்து கொண்டு தாம் தியாகங்களைச் செய்ததாகவும், அர்ப்பணிப்புக்களைப் புரிந்ததாகவும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க போன்றவர்கள் பேசிக்கொண்டிருக்கையில், தியாகங்கள் தான் செய்யாதுவிடினும் அர்ப்பணிப்புடனும், நெருக்கடிகள், சிரமங்களின் மத்தியிலும் சேவை செய்பவர்களுக்குப் பாராட்டுக் களும், கௌரவங்களும், பரிசுகளும் கிடைக்கப் பெறுவதில் தவறு என்ன உள்ளது?

ஆனால், இத்தகைய பரிசுகளும், கௌரவங்களும் சனாதிபதி சந்திரிகா பதவியில் இருக்கும்வரை பிரதமர் ரணிலுக்கோ அன்றி நோர்வே அரசிற்கோ கிடைக்குமா? என்பது சந்தேகமே ஆகும். ஏனெனில், இவற்றைத் தட்டி வீழ்த்தி விடவும், குழப்பி அடித்துவிடவும் சனாதிபதி சந்திரிகா தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டவராகவே உள்ளார். இன்றுவரை அவர் தன்னை மாற்றிக்கொள்ளவில்லை.

# இளைஞர்களை யுத்தத்தில் ஈடுபடுத்தி உயிரைப் பறிக்கும் எண்ணம் எப்போதுமில்லை

### -சிறிலங்காப் பிரதமர் ரணில் அறிவிப்பு

(கொழும்பு)

இளைஞர்களை யுத்தத்தில் ஈடுபடுத்தி அவர்களின் உயிர்களைப் பறிக்கும் எண்ணம் தமக்கு எப்போதும் இல்லை என்று சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஐக்கிய தேசியக்கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யுத்தம் எந்த வேளையிலும் இரு தரப்புக்கும் வெற்றிதரப் போவதில்லை. தற்போது இடம் பெற்றுவரும் சமாதானப் பேச்சு வார்த்தைகளில் அரசு நம்பிக்கை கொண்டிருக்கிறது.

மக்களுக்கு சமாதானம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் இறுதிக் கட்டம் இதுவாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியில் அதிக அங்கத்தவர்களை இணைத்துக் கொள்வதன் மூலம் சமாதானத்தை மேலும் வலுப்படுத்த முடியும்.

இலங்கையில் இடம்பெற்று வரும் சமாதான முயற்சிகளை உலகம் உன்னிப்பாக அவதானித்து வருகின்றது.

விடுதலைப்புலிகள் சமாதான முயற்சிகளில் இருந்து விலகிக் கொள்ளப்போவதில்லை. வடக்கு கிழக்கில் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல் இடம்பெறவுள்ளது.

ஈராக் போரை எதிர்க்க முனையும் பலர் அதனையே காரணம் காட்டி இலங்கையின் சமாதான முயற்சிகளைப் பின்தள்ளிவிட முனைகின்றார்கள்.

அனைத்து சமாதான முயற்சிகளுக்கும் மக்கள் அர்ப்பணிப்புடன் தமது ஆதரவைத் தரவேண்டும்.

இலங்கையின் பொருளாதார மேம்பாட்டிற்கு அரசு முழுமையான கவனம் செலுத்தி வருகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பரீட்சை முடிவுகள் இவ்வாரம் வெளிவரும்!

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் இந்தவாரம் வெளியிடப்படவுள்ளன என சிறிலங்காவின் பரீட்சை ஆணையாளர் நாயகம் விஜேசிறி தெரிவித்துள்ளார்.

முதலாம் தவணை விடுமுறைக்கு முன்னர் முடிவுகளை வெளியிடத்திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்கள் திறன் மதிப்பீடுகளும் பெறுபேற்றுப் பத்திரத்துடன் சேர்க்கப்பட்டுள்ளதாலேயே பெறுபேறு வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

க.பொ.த.உயர்தரப் பரீட்சை நடைபெறும் பாடசாலைகள் முதலாம் தவணைக்காக ஏப்ரல் 10ம் திகதியும் ஏனைய பாடசாலைகள் 4ம் திகதியும் மூடப்படவுள்ளன.

## ஆலயத்தை மாசுபடுத்தும் சாராய வடிசாலைக் கழிவு நீர்!

(யாழ்ப்பாணம்)

பனம் சாராய வடிசாலைக் கழிவுநீர் நவாலி கண்ணகை அம்மன் ஆலய சுற்றாடலை மாசுபடுத்துகின்றது.

இந்த ஆலயத்திற்கு அருகில் அமைந்துள்ள வடிசாலையில் இருந்து வெளியேறும் கழிவு நீர் ஆலய பின் வீதியில் உள்ள வேலிக்கு அருகில் விடப்படுகின்றது.

இதனால், இந்த ஆலயத்துக்குச் செல்லும் அடியார்கள் பெரும் அசௌகரியங்களை அனுபவிக்கின்றனர்.

இக்கழிவு நீரை அருந்தும் கால் நடைகள் மது போதையில் மயங்கிய நிலையில் கிடப்பதையும், பறவை இனங்கள் மரங்களில் இருந்து கீழே விழுந்து இறப்பதையும் அவதானிக்க முடிகின்றது.(23)

## திலீபன் மருத்துவமனையில் சிரமதான நடவடிக்கை

பூநகரிப் பிரதேசத்தில் தியாக தீபம் அன்னைபூபதி அவர்களின் 15 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நல்லூர் மகாவித்தியாலயத்தின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஒன்று சேர்ந்து தியாகதீபம் திலீபன் மருத்துவமனையில் சிரமதானத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மேற்படி சிரமதானப்பணி நல்லூர்.ஆலங்கேணி வலயப் பொறுப்பாளர் சரூபனின் ஒழுங்கு படுத்தலில் நடைபெற்றது. தியாக தீபம் திலீபன் மருத்துவமனை தொண்டர்கள், வைத்தியர், பெண்கள் மேம்பாட்டு போராளிகள் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## பிற்போடல்

தமிழீழ சட்டக்கல்லூரியின் நாலாம் அணி மாணவர்களுக்கு இன்று நடைபெறவிருந்த ஒன்றுகூடல் நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது.

இந்த ஒன்றுகூடல் எதிர்வரும் 15ஆம் திகதி இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## எல்லேயில் வெற்றி

(உடையார்கட்டு)

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவு மட்டத்திலான எல்லே விளையாட்டுப்போட்டியில் உடையார்கட்டு நண்பர்கள் அணியினர் வெற்றிபெற்றனர். இவ்விளையாட்டுப் போட்டி கடந்த 23ஆம் திகதி புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டுத் திடலில் நடைபெற்றது. (19)

## பொ.ஐ.மு. ஆட்சியமைத்தாலும் பேச்சுவார்த்தை தொடரும்

### -கட்சி ஊடகப் பேச்சாளர்

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சியமைத்தாலும் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தை தொடரும் என்று பொதுசன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளரான சரத் அமுனுகம மற்றும் மங்கள சமரவீர ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

சில குறிப்பிட்ட கட்சிகள் ஆட்சியமைத்தால் போர் மூளும் என்று கூறப்படுவது வாக்காளர்களின் திறமைக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல் என்று அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## மீள்குடியமரும்....

யான பொருட்களை நீடித்த கால பாவனைக்கு உரிய வகையிலும் சுகாதார வழி முறைகளுக்கேற்ற வகையிலும் உதவி நல்கி வரும் மற்றைய நிறுவனங்களும் வழங்க முன்வரவேண்டும்.

இந்நிறுவனத்தினரால் கிளி., முல்லை., வவுனியா மாவட்டத்தில் முதற்கட்டமாக தெரிவு செய்யப்பெற்ற 4300 குடும்பங்களுக்கு மேற்படி 18 வகையான உடனடித் தேவையான உணவற்ற நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளதாக இந்நிறுவன தலைமைச் செயலக தேசியத் திட்ட இணைப்பாளர் வே. குகதாஸ், பணிப்பாளர் த.சித்திரவேல் ஆகியோர் தெரிவித்துள்ளனர். அத்துடன், மேற்படி பொருட்களை வழங்கிய குடும்பங்களுக்கு மேலும் இக்குடும்பங்களின் பொருளாதாரத்தினை முன்னேற்றும் வகையிலும், அவர்களின் வருமானத்தைப் பெருக்கும் நோக்கில் செயல் திட்டம் தீட்டப்பட்டுள்ளதுடன், அவற்றினை இரு மாதங்களில் செயற்படுத்தவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

ஸ்பானிய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி பனோமர் அல்போமா அவர்களின் முயற்சியின் பயனாக மேற்படித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருவதாகவும், மேலும் இம்மூன்று மாவட்டங்களிலும் 150 மலசல கூடங்கள் தற்போது தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்டு வருவதுடன் 100 பொதுக்கிணற்று திருத்த வேலைகளும் இடம்பெற்று வருவதாகவும் இவ்வதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கிளி., முல்லை. மாவட்டத்தில் சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், வயோதிபர் இல்லங்கள் போன்றவற்றிற்கே மலசல கூடம் அமைத்துக் கொடுத்தல் மற்றும் கிணறுகள் திருத்தியமைப்பதற்கு மேற்படி நிறுவனம் முன்னுரிமை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதொரு அம்சமாகும்.

மேலும், மக்களின் அபிப்பிராயங்களுக்கேற்ற வகையில் மக்களின் சுகாதாரத்தினை கவனத்திற்கொண்டு மக்களுக்கு சிறந்த பாவனைக்குகந்ததும் நீடித்த கால பாவனைக்கேற்ற வகையில் இந்நிறுவனத்தினைப் போன்று அனைத்து உதவி நல்கும் நிறுவனங்களும் பொருட்களை வழங்க முன்வரவேண்டும் என்றார்.

# வடமராட்சி கிழக்குக் கடலில் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிப்பு

வடமராட்சி கிழக்குக் கடற்பரப்பில் கடந்த சனிக்கிழமை 17 இந்தியமீன்பிடி வள்ளங்கள் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளதுடன் வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர்களின் மீன் பிடி வலைகளை வெட்டியும் அழித்தும் நாசம் செய்தனர்.

இதனால் தாம் கடலில் தொழில் செய்ய முடியாதுள்ளது என வடமராட்சி கிழக்கு கடற் தொழிலாளர் தெரிவிக்கின்றனர்.

கடந்த 23.01.2003 அன்று இதேபோல் அத்துமீறிக் கடற் தொழிலில் ஈடுபட்ட 10 இந்திய இழுவைப் படகுகளையும் 60 இந்திய மீனவர்களையும் மறித்துப் பிடித்த வடமராட்சி கிழக்கு கடற் தொழிலாளர்கள் அவர்களை கடற்தொழிலாளர் சமாசத்திடம் ஒப்படைத்தனர். சமாசம் அவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கி (24.01.2003) மறுநாள் விடுதலை செய்ததுடன் எச்சரிக்கைக் கடிதமும் கொடுத்து இந்தியாவிற்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (11)

# கைக்குண்டு வீச்சில் கணவனும் மனைவியும் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் வீடு ஒன்றின் மீது நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்கு தலில் கணவனும் மனைவியும் காயமடைந்துள்ளனர்.

இத்தாக்குதல் நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பிரதம தபாலக சிற்றூழியரான கதிர்காமத்தம்பி வேலுப்பிள்ளை, இவரது மனைவியான வேலுப்பிள்ளை நாகலட்சுமி ஆகியோரே காயமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு விமானப்படை முகாம் பாதுகாப்பு வலயத்துக்குள் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# பெண்மணி படுகாயம்!

(அலுவலக செய்தியாளர்)

முறிகண்டிப்பகுதியில் இடியன் துவக்கு வெடித்ததில் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று பிற்பகல் 5.00 மணிக்கு முறிகண்டி பொன்னகர்ப்பகுதியில் வீட்டில் இருந்த இடியன் துவக்கை மகன் தூக்கி வீசிய போது அது வெடித்ததில் இராமலிங்கம் சரசு (38 வயது) என்ற பெண்ணே வயிற்றில் படுகாயத் திற்குள்ளானார்.

காமடைந்த பெண்மணி கிளி. தனியார் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளி. மாவட்ட அக்கராயன் மருத்துவ மனையில் மேலதிகசிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (பா)

– புலிகளுக்கான வானொலி அனுமதிப்பத்திர வழக்கு –

# நோர்வே தூதுவர் தவிர ஏனையோர் ஆஜராகப் பணிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு வானொலி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் தவிர ஏனைய அனைவரும் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என அழைப் பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சிங்கள ஜாதிக சங்கமய என்ற அமைப்பு தாக்கல் செய்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த மனுவை மீண்டும் மே மாதம் 5ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நீதிமன்றம் தீர்மானித்தது.

எதிரிகளாக சுங்கத்திணைக்கள பணிப்பாளர் நாயகம், மக்கள் தொடர்பாடல் அமைச்சின் செயலாளர், விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகச் செயலாளர் ஆகியோர் அன்றைய தினம் நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஜோன் வெஸ்பேர்க்கை ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தாலும் ஐக்கிய நாடுகள் சபையின் ஐ.நா. பிரமாணங்களுக்கு அமைய தமக்கு சட்ட ரீதியான பாதுகாப்பு இருக்கிறது என்று நோர்வே தூதுவர் அறிவித்திருந்தார்.

### சதாமின்...

ஹுசைனின் அரண்மனை தொலைபேசி மையங்கள் போன்றவை தகர்க்கப்பட்டன. மேலும் பல இடங்களில் குண்டுகளும் எவுகணைகளும் விழுந்து வெடித்துள்ளன. இதனால் பாகதாத் நகரம் எரிந்து கொண்டிருக்கின்றது. இதனைத் தொலைக்காட்சிப் படங்களில் காணக்கூடியதாகவுள்ளது.

ஈராக்கிலுள்ள பல முறைகள் படைகள் பாக்தாத்தை நோக்கி முன்னேறும் அமெரிக்கப் படைகள் நஸ்ரியா நகரைச் சுற்றி வளைத் துத் தாக்கி வருகின்றன. இம் மோதலில் ஈராக்கிய வீரர்கள் நூறு பேர் கொல்லப்பட்டதாகவும் ஐம்பது பேர் சிறைப்பிடிக் கப்பட்டதாகவும் அமெரிக்கப் படையினர் கூறியுள்ளனர். இது தவிர பரசூட்டில் தரையிறங்கும் அமெரிக்கப்படைகள் எங்காவது தற்கொலைப் படையினர் பதுங்கி இருக்கின்றனரா என்பதைக் கண்டறிந்து அவர்களைக் கொல்லும் பணியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே ஈராக் படையினர் நடத்திய தாக்குதலில் அமெரிக்க உலங்குவானூர்தி ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் அதில் இருந்து மூன்று விமானிகளும் கொல்லப்பட்டதாகவும் அது தெரிவித்துள்ளது.

### புதிய இராணுவ...

அக்கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது :

யாழ். மாநகர சபை அலுவலக முன்னால் நகர சபை மண்டபம், உல்லாசப் பயணிகள் தங்ககம், யாழ். கோட்டைப் பகுதிகளை உள்ளடக்கிய யாழ். மாநகர சபைக்குச் சொந்தமானதுமான பரந்த விசாலமான நிலப்பரப்பில், ஏற்கனவே யாழ். ஞானம்ஸ், சுபாஸ் விடுதிகளில் ஆக்கிரமித்து அமைக்கப்பட்டிருந்த தற்போதைய யாழ். படைப்பிரிகேட்டின் தலைமையகத்தை அங்கிருந்து அகற்றி மீள இப்பகுதிகளில் அமைப்பது என்ற தங்கள் அரசின் தீர்மானமானது, யாழ். மண்ணில் பெரும் பதற்ற நிலையை ஏற்படுத்தியுள்ள அதேவேளை மக்களின் கடும் எதிர்ப்பலைகளையும் சம்பாதித்துள்ளது.

மேலும் இப்பகுதிகளில் அமையப் பெற்றுள்ள இரண்டு முக்கிய பாடசாலைகள், பொது நூலகம், துரையப்பா விளையாட்டு ரங்கு மற்றும் புதிய நீதிமன்ற வளாகம் ஆகியவற்றிற்கு நெருக்கமாக உள்ள பகுதிகளில் அமுல்படுத்தப்படவுள்ள மீள் குடியேற்றத் திட்டத்தின் முக்கியத்துவத்தையும் தேவையான நிலப்பரப்பையும் இட்டு யாழ். மாவட்டத்தில் உள்ள மக்கள் பொது அமைப்புக்கள் அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளன. நாம், சிறிலங்காப் படையினர் யாழ். ஞானம்ஸ், சுபாஸ் விடுதிகளில் இருந்து வெளியேறுவது என்ற முடிவை வரவேற்கின்ற அதேவேளை, இதற்கு மாற்றீடாக யாழ். நகரின் இதயப் பகுதியில் பாரிய படைத்தளத்தை மீள ஆக்கிரமித்து அமைப்பது என்ற முடிவை கடுமையாக கண்டிக்கின்றோம்.

இதேவேளை ஹைக்கோனில் இடம்பெற்ற பேச்சுக்களின் போதும் எமது பிரதிநிதிகள் இது தொடர்பான எமது ஆழமான அதிருப்தியைத் தெரிவித்துள்ளதுடன் யாழ். மக்களின் சார்பாக தங்களின் அரசின் இந்த தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் எனவும், தமிழீழ விடுதலைப் புலிகளின் கலந்தாலோசனையுடன் யாழ். மாநகர சபை சூழலுக்கு வெளிப்பரப்பு ஒன்றில் தற்காலிக அமைவிடத்தை ஈடுசெய்யலாம் எனவும் வலியுறுத்தியுள்ளோம் என தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களினால் சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சிறிலங்கா...

பாகச் சென்ற படகுகளில் இருந்து திருப்பித் தாக்கி படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித் துள்ளன.

இதில் மூன்று கடற்படையினர் காயமடைந்துள்ளதாகவும் இவர்கள் திருமலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

### அன்ரன்...

வது என்றும் அப்பொழுது முடிவு செய்யப்பட்டிருந்தது.

இதன்படியே அன்ரன் பாலசிங்கம் அவர்களும், பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸும் சந்தித்துப் பேச உள்ளனர்.

அத்துடன் நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தையின் ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் இவர்கள் இருவரும் பேசுவார்கள் என்றும் மேலும் தெரிய வருகின்றது.

### ஆனந்தசங்கரி...

தப்பட்டுள்ளது.

மாணவர்கள், விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள் என சகலரும் இப்போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

## சாவு அறிவித்தல்

### அந்தோனிப்பிள்ளை செலஸ்ரின்

(இரணைப்பாலை)

இரணைப்பாலை 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை செலஸ்ரின் (புதுக்குடியிருப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னாள் தலைவர்) நேற்று சாவடைந்துள்ளார். இவர் காலம்சென்ற அந்தோனிப்பிள்ளை -அஞ்சலீனம்மாவின் மகனும், மேரிஜோசெப்பினின் அன்புக்கணவரும், பிறிஸ்ரெசல் (ஆசிரியை, புதுக்குடியிருப்பு ம/வி) ஜெனிற்றாவினி (லண்டன்), லொலற்றா ரோகினி (தாதி) கமில்டன், டெனிஸ்ரன் ரெஜி (உடையார் கட்டு ம/வி), பிரான்சிஸ்கா பரிமளராணி, புஸ்பரோகினி, செறில் செல்வினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், மனுவற்பிள்ளை,ஜோசப் அல்பிரட், கில்பேட் இருதய நாயகி (லீலா) (லண்டன்) அல்போன்ஸ் (ஜேர்மனி), அகஸ்ரின் (பங்குத்தந்தை வட்டக்கச்சி) ஆகியோரின் சகோதரனும், கில்மன் (உதவி ஆசிரியர், ஈழநாதம்) தங்கராஜ் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும்,தனோஜிகா, பியூனா(லண்டன்) ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் இறுதி நல்லடக்கம்,நாளை புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு இரணைப்பாலை பற்றிமா அன்னை ஆலயத்தில் திருப்பலிஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் இரணைப்பாலை சேமக் காலையில் இடம் பெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

தகவல்:-
அருட்தந்தை அகஸ்ரின்
(சகோதரன்)

முகவரி:
5ஆம் வட்டாரம்,
இரணைப்பாலை. (சி-7823)


## திறப்பு விழா



## சர்வதேச தொலைத்தொடர்புச் சேவை

உங்களுக்கான தனது சேவையை பளையிலும்

இன்று (01–04–2003) ஆரம்பிக்கிறது.

நேரம் : நண்பகல் 12.00 மணி    இடம் : தமிழீழ வைப்பகம் முன்பாக – பளை.

## கிளிநொச்சி சர்வதேச தொலைத்தொடர்பு சேவை வழங்கும் மற்றுமொரு சலுகை !



சர்வதேச அழைப்பு - 35/-
உள்ளூர் அழைப்பு - 13/-
மாலையில் இருந்து காலை வரை உள்ளூர் அழைப்புகளுக்கு - 10/-



(சி-7822)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.